சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 15.10.2024 SC.129/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | தொழில் | : | |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |

**அ.சா.9**

---

முதல் விசாரணை

நான் தற்சமயம் காவல்துறையில் பணியாற்றி 2020ல் ஓய்வு பெற்றேன். நான் கூடலூர் வடக்கு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றியபோது 03.01.2019ம் தேதி கூடலூர் தெற்கு காவல்நிலைய பொறுப்பு சார்பு ஆய்வாளராக இருந்தபோது அன்றைய தினம் 16.00 மணிக்கு கம்பம் அரசு மருத்துவமனையிலிருந்த வந்த தகவலைப் பெற்று மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த நல்லதம்பி என்பவரை விசாரித்து அவர் கொடுத்த எழுத்துமூலமாக புகாரைப் பெற்று 21.30 மணிக்கு நிலையம் வந்து கூடலூர் தெற்கு காவல்நிலைய குற்ற எண்.5/2019 U/s 294(b), 355, 324, 506(2) இ.த.ச.வாக வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7.** அதன்பின்பு 22.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளை விசாரணை செய்து சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் **அ.சா.ஆ.8**. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 தயார் செய்தேன். மேற்படி சாட்சிகளான மணி, ஜக்கையராஜ் ஆகியோரிடம் தனித்தனி வாக்குமூலம் பதிவு செய்தேன். 04.01.2019ம் தேதி காலை 11.00 மணியளவில் கூடலூர் பெட்ரோல் பலக் அருகில் நின்றுகொண்டிருந்த 1ம் எதிரி ராஜாவை காரணம் சொல்லி சாட்சிகள் பழனி, முத்து ஆகியோர் முன்னிலையில் கைது செய்தேன். அதன்பின்னர் எதிரியானவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.10.** 1ம் எதிரியானவர் என்னுடன் வந்தார். சம்பவத்திற்கு பயன்படுத்திய அரிவாளை எடுத்து ஆஜர் செய்கிறேன் என கூறியதால் அருகில் இருந்த ஓடைப் புதரில் இருந்து மேற்படி சாட்சிகள் மீது அத்தாட்சி தயார் செய்து அரிவாளை கைப்பற்றினேன். அத்தாட்சி **அ.சா.ஆ.11**. அரிவாள் சா.பொ.ஆ.1. அதன்பின்னர் 11.30 மணிக்கு எதிரிகளுடனும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரியை தக்க வழிநடை காவல்மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி வழக்கை மேல்விசாரணைக்காக

ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக புலன் ஆய்வு அதிகாரியான ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் கூடலூர் தெற்கு காவல்நிலையத்தில் பொறுப்பு அதிகாரியான நியமிக்கப்பட்டேன் என்பது குறித்த எழுத்துப்பூர்வமான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அ.சா.1 புகாரில் 2 மற்றும் 3ம் வரிகளில் ஏற்கனவே எழுதிய எழுத்துக்களுக்கு மேல் மீண்டும் எழுதப்பட்டுள்ளது என்றால் சிறிதாக எழுதப்பட்டுள்ளது. புகாரில் சம்பவம் நடந்த நேரம் 26.30 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் 3 வார்த்தைகள் எழுதி அழிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் புகாரில் நடந்த சங்கதியை குறிப்பிட்டுள்ளார். நான் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்தபோது 307 இ.த.ச. பிரிவின் கீழ் வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை. ஆய்வாளரிடம் வழக்கு கோப்புகளை மேல்விசாரணைக்கு ஒப்படைக்கும்போது நான் சட்ட மாறுதல் அறிக்கை எதுவும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை 506(2) என்ற சட்டப்பிரிவே வராது என்றும், ஆய்வாளர் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக மேற்படி பிரிவை முதல் தகவல் அறிக்கையில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை 3வது காலத்தில் நிலையத்திற்கு தகவல் கொடுத்த நேரம் 21.30 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம் 12-ல் தகவல் கிடைப்பதற்கு முன்னரே புகார் பெறப்பட்டது என சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறானது. தகவல் கிடைத்த பின்னர் தான் புகார் பெறப்பட்டது. நான் மருத்துவமனை சென்று புகார் பெற்று அதனடிப்படையில் வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. வேறு ஒரு நபர் தயார் செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையில் நான் கையொப்பம் மட்டுமே போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. காயம்பட்ட நபரை நான் பார்த்தபோது அவர் உள்ளங்கையில் ரத்த காயம் இருந்தது. வெட்டுக்காயம் இருந்ததா என்றால் அதை நான் பார்க்கவில்லை. நான் காயம்பட்ட நபரை பார்க்கவில்லை என்றும், பார்த்திருந்தால் காயத்தின் தன்மை பற்றி எனக்கு தெரிந்திருக்கும் என்றும் சொன்னால் சரியல்ல. நான் காயம்பட்ட நபரை பார்க்கும்போது ஊமக்காயங்கள் இருந்ததா என்றால் அதை நான் பார்க்கவில்லை. எதிரியை கைது செய்த இடத்திலிருந்து எந்த ஓடையில் எந்த கரையில் சா.பொ.1 அரிவாள் கைப்பற்றப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். கூடலூரில் ஒவ்வொரு ஓடைக்கும் ஒரு பெயர் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குச்சொத்தை நான் ரசாயன பகுப்பாய்வு அனுப்பவில்லை என்றால் சரிதான். அரிவாள் கடையில் கிடைக்கக்கூடிய பொருள் என்றால் சரிதான். நான் சொன்ன

நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றும், அதன்பேரில் வழக்குச்சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குச்சொத்தை காவல்நிலையத்தில் வைத்து நாங்கள் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சாட்சிகள் முன்னிலையில் வழக்குச்சொத்தை கைப்பற்றவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக சொல்லப்படும் விளக்கமாற்றை நான் எதுவும் கைப்பற்றவில்லை. உண்மையில் விளக்கமாற்றை வைத்து எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்பதால் தான் அதை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.